# ஏக்கருக்கு 42 மூட்டை நெல்.... லாபம் கூட்டும் எளிய தொழில்நுட்பங்கள்!

## 25.10.2012

எந்தக் காரியமாக இருந்தாலும், முறையாகத் திட்டமட்டாலே பாதி வெற்றியை அடைந்து விடலாம் என்பார்கள். இதற்கு விவசாயம் விதி விலகல்ல என்பதை நடைமுறையில் காட்டிக் கொண்டிருக்கிறார் திருவாரூர் மாவட்டம், வலங்கைமான் தாலூகா, வடக்குப்பட்டம் கிராமத்தைச் சேர்ந்த சின்னதுரை. இயற்கை விவசாயத்தோடு, தனித்துவமான சில நடவடிக்கைகளையும் மேற்கொண்டு... அதிகப் பலன்களை அடைந்து வருகிறார்.

தேடிச்சென்ற நம்மிடம் ஆர்வம் பொங்க பேச ஆரம்பித்த சின்னதுரை, எங்களுக்கு மொத்தம் 8 ஏக்கர் நிலம் இருக்கு. முழுக்க களிமண் பூமி. 4 ஏக்கரில் நெல், 2 ஏக்கரில் பருத்தி, 1 ஏக்கரில் தீவனப்புல்லும் அதில் ஊடுபயிராக வெண்டையும் இருக்கு. 33 சென்டில் நிரந்தர நாற்றங்கால் அமைத்திருக்கிறோம். மீதியுள்ள இடத்தில் மாட்டுக் கொட்டகை, மாடுகள் உலாவுவதற்கான இடம், மோட்டார் கொட்டகை எல்லாம் இருக்கிறது.

**மழைநீர்ச் சேமிப்பு!**

முன் இந்தப் பகுதியில் குறைவான ஆழத்திலேயே நிலத்தடி நீர் கிடைத்ததால்.. 4 இஞ்ச் குழாயை இறக்கி, சாதாரண மேல்நிலை மோட்டார் பயன்படுத்திக் கொண்டு இருந்தோம். இப்போது நிலத்தடி நீர் அதிக ஆழத்திற்குப் போய்விட்டது. அதனால் 8 இஞ்ச் குழாயை இறக்கி, நீர் மூழ்கி மோட்டார் போட்டிருக்கிறோம். ஆனாலும், பழைய போர்வெல்லை மண்ணைப் போட்டு மூடாமல் அதில் மழைநீர் வீணாகாமல், மண்ணிற்குள்ளேயே போய் நிலத்திடி நீர் மட்டத்தை உயர்த்துகிறது.

**மாடு கட்டும் இடத்தில் மணல்!**

எங்களிடம் 19 மாடுகள் இருக்கு. பெரும்பாலான நேரங்கள், கொட்டகைக்கு வெளியில்தான், மாடுகளைக் கட்டி போடுவோம். அந்த இடத்தில் மணலைப் பரப்பி விட்டிருக்கிறோம். மணலில் விழும் சாணியை மிகவும் சுலபமாக அள்ள முடியும். அதனுடன் மணல் இருப்பதால் மாடு கட்டும் இடத்தில் ஈரம் கோர்ப்பதில்லை. அதனால் ஈ, கொசு தொல்லையெல்லாம் இல்லை. இப்போது பயன்பாட்டில் இருக்கும் போர்வெல்லில் தண்ணீர் கொட்டும் இடத்தில் ஒரு குழி எடுத்து சிமெண்ட் உருளையைப் பதித்து இருக்கிறேன். தினமும் இதில் சாணத்தை கொட்டிவிடுவேன். தண்ணீர் பாயும்போது சாணியும் கரைந்து பயிர்களுக்குப் போய்விடும்.

**நாற்றங்கால்.. நாற்றுக்கு மட்டுமே!**

நான் 4 ஏக்கரில் நெல் சாகுபடி செய்கிறேன். ஒற்றை நாற்று முறையில் நெல் சாகுபடி செய்வதற்கு நான்கு ஏக்கருக்கு 12 சென்டிலிருந்து 16 சென்ட் வரைக்கும் நாற்றங்கால் அமைத்தாலே

போதுமானது. ஆனால், நாங்க 33 நென்ட் இடத்தை நாற்றங்காலுக்காவே ஒதுக்கிட்டோம். இதில் முக்கியமான ஒரு தொழில்நுட்பம் ஒளிந்திருக்கு. நாற்றங்காலில் நாற்று பறித்த பிறகு, அந்த இடத்தை அப்படியே விட்டுவிடுவோம். நாற்று உற்பத்தி இல்லாத காலங்களில், இரவில் மாடுகளை இதில்தான் கட்டிப் போடுவோம். கொஞ்சம்கூட ரசாயனம் கலக்காத பசுந்தீவனத்தைச் சாப்பிடும் மாடுகளோட சத்தானக் கழிவுகள், இந்த மண்ணை நன்றாக வளமாக்குகிறது. அதனால், நாற்றங்கால் மண் நல்ல கருமையாகவும், வெண்ணெய் மாதிரி இளகியும் இருக்கும். உயிர் சத்துக்கள் அதிகமாக நிறைந்திருக்கும் இந்த மண்ணில் உற்பத்தியாகும் நாற்றெல்லாம் நல்ல வளமாக இருக்கும்.

**இலை, தழை மூலம் இயற்கை ஊட்டம்!**

விதைப்புக்கு 40 நாட்களுக்கு முன்பே நாற்றங்காலை தயார் செய்ய ஆரம்பித்துவிடுவோம். சேத்துழவு செய்து, வேம்பு, எருக்கன், நுனா, பீக்கலாத்தி, நொச்சி, நெய்வேலி காட்டாமணக்கு இலைகளை குச்சிகளோடு உடைத்துக் கொண்டு வந்து தினமும் போடுவோம். நான்கு நாட்களுக்கு ஒரு முறை சாணம் கலந்த தண்ணீரைப் பாய்த்திடுவோம். இந்த இலைகள் கொஞ்சம் கொஞ்சமாக மக்கி கொண்டே வரும். விதைப்பிற்கு ஒரு வாரம் இருக்கும் போது, இலைகளைப் போடுவதை நிறுத்திவிட்டு... நாற்றங்காலை சமப்படுத்தி, பார் பிடிப்போம். பிறகு, விதை நெல்லைத் தூவி விட்டுவிடுவோம். அதிலிருந்து நல்ல திடகாத்திரமான நாற்றுகள் உருவாகிவிடும்.

**நாற்றுகளை குச்சியால் அடிக்கக் கூடாது!**

நடவுக்கு முன் நாற்றை பறித்து அதை கயிறால் அழுத்திக் கட்டி சேறை நீக்குவதற்காக குச்சியால் அடிப்பாங்க. இது தப்பான நடைமுறை. கயிறால் கட்டும்போது நாற்று வளையும். அதனால் பலவீனமாகிவிடும். திரும்பவும் அது நிமிருவதற்கே ஒரு வாரம் பத்து நாள் ஆகிவிடும்.

குச்சியால் அடிக்கும் போது வேர் அறுந்து போகவும், நிறைய வாய்ப்பிருக்கு. நாங்கள், அன்னகுண்டாவில் தண்ணீர் நிரப்பி, அதில் நாற்றுக்களைக் கழுவி... அன்னகுண்டாவிலே நடவு வயலுக்கு எடுத்துக் கொண்டு போவோம். இந்த மாதிரி செய்தால்... கண்டிப்பாக நல்ல விளைச்சல் கிடைக்கும்.

என்னோட நெல் பயிர்களில் கொஞ்சம் கூட நோய், பூச்சித்தாக்குதல் இருக்காது. இயற்கைச் சீற்றங்களிலிருந்தும் தன்னை தற்காத்துக் கொள்கிறது. வேப்பம்பிண்ணாக்கை மட்டும் சாணத்தில் கலந்து உரமாகக் கொடுப்போம். களைகளை மண்ணில் அழுத்தி விடுவோம். வேற எந்தப் பராமரிப்பும் கிடையாது.

எனக்கு ஏக்கருக்கு 42 மூட்டையில் இருந்து 50 மூட்டை (60 கிலோ மூட்டை) வரைக்கும் நெல் மகசூல் கிடைக்கிறது. என்று சொல்லி நம்மை வியக்க வைத்ததோடு.. இதெல்லாமே எல்லாரும் எளிதாக கடைபிடிக்கக்கூடிய விஷயங்கள் தான். கொஞ்சம் சிந்தித்து செயல்பட்டால்.. கண்டிப்பாக விவசாயத்தில் வெற்றிதான் என்றார்.

**சினை மாடு விற்பனையில் சிறப்பான லாபம்!**

சின்னதுரை மாடுகள் வளர்த்தாலும் பால் உற்பத்தியில் ஈடுபடுவதில்லை. அது பற்றிப் பேசிய சின்னதுரை, ஒரு ஏக்கரில் இருக்கும் கோ – 4 தீவனப்புல்லுக்கு இடையில் ஊடுபயிராக வெண்டை போட்டிருக்கிறோம். தீவனப்புல்லோட சேர்த்து வெண்டையையும் மாடுகளுக்கு உணவாக கொடுக்கிறோம். இதை மாடுகள் நன்றாக விரும்பிச் சாப்பிடுகிறது. இப்படி இயற்கையில் விளையும் தீவனங்களைச் சாப்பிடுவதால், மாடுகள் நன்றாக ஆரோக்கியமாக இருக்கிறது. அதனுடன், சரியானப் பருவத்தில் சினை பிடித்துவிடுகிறது. நல்ல சத்தானக் கழிவுகளும் கிடைக்கிறது. மாடுகளுக்குக் கொடுத்தது போக, மீதியுள்ள வெண்டையை, கிலோ ரூ.20 வீதம் விற்பனை செய்கிறோம். தினமும், சராசரியாக 20 கிலோ வெண்டை கிடைக்கும். பால் மூலமாக வருமானத்தை நான் எதிர்பார்ப்பதில்லை. இங்கே உள்ள மாடுகளில் ஒன்று மட்டும் உம்பளாச்சேரி நாட்டுப்பசு. இது தினமும் 5 லிட்டர் பால் கொடுக்கிறது. இதை எங்க வீட்டுத் தேவைக்கு வைத்துக் கொள்வோம். மீதியுள்ள எல்லாமே கலப்பின மாடுகள்தான். ஒரு வயதில் கன்றுக்குட்டியை வாங்கி வளர்த்து சினைபிடிக்க வைத்து ஒன்பது மாத சினையாக இருக்கும் போது விற்றுவிடுவேன். ஐந்தாயிரம் ரூபாய்க்கு வாங்கும் கன்றை இப்படி விற்கும் போது முப்பதாயிரம் ரூபாய் வரைக்கும் விற்க முடியும். இந்த மாதிரி வருடத்திற்கு நான்கு மாடுகளை விற்றுவிடுவேன். இப்போது கையில் 3 காளை, 9 கன்றுக்குட்டி, 6 சினை மாடுகள் இருக்கு. இப்படி மாடுகளை விற்பது மூலமாக ஒரு கணிசமான வருமானம் கிடைத்துக் கொண்டேயிருக்கிறது என்றார்.

**தொடர்புக்கு**

**சின்னதுரை, செல்போன் : 99521 – 00021.**